END TIME WARRIORS

# பரலோக வாசல்

A monthly prayer bulletin for YOUTH & TEENS

Battle 01 - Field 01 - May 2020

**ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.**

*மத்தேயு 7:14*

## முதல் வரிகள்......

கர்த்தரும் இரட்சருமாகிய இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தேவனுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் உன்னத பணியில், நம்முடைய இந்திய தேசமானது, அநேக பரிசுத்தவான்களையும், அநேக மிஷனரிகளையும், இன்று வரை சந்தித்துக் கொண்டிருக்கிறது. வெவ்வேறு காலங்களில் ஏற்பட்ட எழுப்புதல், அதினால் சந்திக்கப்பட்ட மக்கள் இனங்கள், ஏற்பட்ட சமுதாய சீர்திருத்தங்கள், அன்றைய காலங்களில் முக்கியமானதாகவும், தேவனால் அனுமதிக்கப்பட்டதாகவும் இருந்தது, என்பதை இன்று வரை நம்மால் மறக்க இயலாது. எனவே இன்றளவும் வேதம், நமக்கு காலங்களின் முக்கியத்துவத்தை உணர்த்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, பூமியானது தன்னுடைய கடைசி ஓட்டத்தில் சுழன்று கொண்டிருப்பதும், பரிசுத்த வேதம் உதிர்த்த ஒவ்வொரு தீர்க்கதரிசன வார்த்தைகளிலும் ஒன்று கூட சிதறாமல் நிறைவேறிக் கொண்டிருக்கும் காலங்கள், நம்மிடத்தில் கூற விளைவது, நீ நிற்பது கடைசிக் காலம்.

இந்த காலம் எப்படியோ, அப்படியே இந்த காலத்தில் எழும்பப்போகும் தலைமுறையும். இதுவரை உலகம் தோன்றினது முதல், அது கண்டிராத ஓர் எழுப்புதலுக்கு, கர்த்தர் தெரிந்து கொண்ட தலைமுறை, என்றால் அது மிகையாகாது. இந்த கடைசிக் கால தலைமுறையை ஒரு யுத்த தலைமுறையாக தேவன் பார்க்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்பாக தேவனுடைய பாதத்தில் நானும் என்னுடைய மனைவியும் உபவாசித்து காத்திருந்த போது, கர்த்தர் எங்களை சந்தித்தார். எனக்காக ஒரு சேனையை நீங்கள் எழுப்ப வேண்டும் என்றும், அது எனக்காக தங்கள் உயிரையும் துச்சமாக நினைக்கும் வாலிப சேனை என்றும் ஆவியானவர் திருவுளம் பற்றினார். இவைகளுக்கு பின்பு, எங்களுக்கு முன்பாக, கடைசிக் கால யுத்த சேனை ஊழியங்கள் ***(End Time Warriors)*** என்ற வார்த்தை தீப்பொறி போல எழுத ஆரம்பித்தது. இந்த தரிசனத்தின் மூலமாக, ஒரு கோடி இளைஞர்களை சேனைகளாக எழுப்பப் போகிறேன் என்றார்.

இந்த தரிசனத்தின் பயணத்திலே நாங்கள் பயணித்து கொண்டிருக்கிறோம். மாத்திரமல்ல, இதை வாசிக்கிற உங்களையும் ஒரு சேனையாய் கர்த்தர் முன் குறித்திருக்கிறார் என்பதில் சந்தேகமும் இல்லை. இது ஆவியானவருடைய காலம்; தேவ ஆவியினால் நடத்தப்படுகிற வாலிபர்கள் திரளாய் எழும்புகிற காலம். இந்த தரிசனத்தில் என்னையும், "அநேக சேனைகளை எழுப்ப பயன்படுத்தும் ஆண்டவரே" என்பது உங்கள் ஜெபமாக இருக்கட்டும். இணைந்து செயல்படுவோம், வாலிபர்களை சேனைகளாய் எழுப்புவோம்.

கிருபை உங்களோடிருப்பதாக

யுத்த களத்தில் உங்களோடு

*R.Solomon*



# தரித்துக்கொள்

சில வருடங்களுக்கு முன்பாக, நான் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் என் கண்களுக்கு முன்பாக ஒரு காட்சியை காண்பித்தார். அதில், திரளான வாலிபர்கள் போர் உடை அணிந்து நின்று கொண்டிருந்தனர். நான் அதை பார்த்துக் கொண்டிருக்கையில், ஆவியானவர் என்னோடு கூட பேச ஆரம்பித்தார். நீ காண்கிறது என்ன என்று வினவினார். நான், அநேக போர் உடை அணிந்த வாலிபர்களைக் காண்கிறேன் என்றேன். மறுபடியும், நன்றாக பார் என்று ஆவியானவர் பேசினார். நான் திரும்பவும் அந்த காட்சியைப் பார்க்க முற்படுகையில், சில வாலிபர்களின் சிரசில், தலைச்சீரா இல்லாதிருந்தது . சில வாலிபர்களின் மார்பில் மார்கவசம் இல்லாதது தெரிந்தது. சில வாலிபர்களின் பாதங்களில் பாதரட்சை இல்லாதது தெரிந்தது. உடனே எபேசியர் *6: 11-17* வரையிலான வசனங்கள் என் கண் முன்னே நிறுத்தப்பட்டது. "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்". அப்பொழுது ஆவியானவர் இடைபட ஆரம்பித்தார், தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளாத எந்தவொரு வாலிபனும், இந்த கடைசி காலத்தில் பரிசுத்தமாய் வாழ முடியாது. அவன் ஒரு சேனை வீரன் என்பதை ஒவ்வொரு நாளும் நினைவில் கொள்ள வேண்டும்.

பொதுவாக இராணுவங்களில் இருக்கும் வீரர்கள், தங்கள் ஆயுதங்களை தங்களோடு எடுத்துக் கொள்வதில் மாத்திரமல்ல, தங்கள் அடியையும் போர்களத்தில் மிக கவனமாக எடுத்து வைப்பார்கள். எந்த இடங்களில் ஆபத்து இருக்கும் என்பது நன்றாக தெரிந்து வைத்திருப்பார்கள். அதே போலத்தான், இதை வாசித்துக் கொண்டிருக்கிற அன்பு வாலிப தம்பி/ தங்கையே, உன்னையும் ஒரு சேனை வீரனாய் கர்த்தர் இன்றைக்கு அழைக்கிறார். ஏனென்றால், எபேசியர் *6: 13* ல், "தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்".

அப்படியென்றால், போராட்டம் உங்களுக்கு எங்கு ஆரம்பிக்கிறது என்றால், நீங்கள் உங்கள் பெற்றோருக்கும், கர்த்தருக்கும் உண்மையாய் இருக்கக் கூடாதபடிக்கும், உங்கள் வேளைகளில், செயல்களில், மற்றும் செயலிகளில் குற்றமற்றவர்களாய் இருக்க முடியாதபடியாதபடிக்கும், இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும் தன்னில் உள்ள ஆயத்தமின்மையை உணர முடியாபடி உள்ள இருதயமும், சவால்கள் நிறைந்த வாழ்க்கை பயணத்தில் உனக்கு எதிராய் தொடுக்கப்படுகிற பிசாசின் கணைகளை எதிர்க்கிற விசுவாசத்தை இல்லாமல் போகச் செய்யவும், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட போது, அந்த நாளில் உன்னுடைய இருதயத்தில் நீ அடைந்த இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்து போகவும், வேத வார்த்தையினால் மாத்திரமே நீங்கள் பிசாசை ஜெயிக்க முடியும் என்பதினால், வேத வார்த்தைகள் உங்கள் இருதயத்திலும், உங்கள் வாழ்க்கையிலும் நிலைத்திராதபடிக்கு உங்களுக்கு போராட்டம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். மேலும், இவைகளை நீங்கள் கேடகமாக அணிந்து கொள்ளும் போது, பிசாசை எதிர்க்கவும், கர்த்தர் விரும்பும் ஒரு சந்ததியாயும், அவர் சொல்லுகிறதை செய்து முடிக்கும் ஒரு சேனையாயும் நீங்கள் எழும்புவீர்கள். ஒரு காலத்தில், நீங்கள் தோற்றுப்போய் நின்று கொண்டிருந்த இடங்களில், விழுந்த பாவங்களில், பரிசுத்தமாய் வாழ முடியவில்லையே என்று வருந்தின நாட்கள் மாறி, நீங்கள் சந்தித்த பாதைகளில் துவண்டு கிடக்கிற வாலிபர்களை உங்களைக் கொண்டு கர்த்தர் எழுப்புவார். அதற்கு முதலாவது, நீங்கள் அவருடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்து கொண்டு, இந்த உலகத்தில் வெற்றியுள்ள ஒரு வாழ்கையை வாழ்ந்து, சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய், பிதாவின் சந்நிதானத்தில் குற்றமற்றவர்களாய் நிற்க ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறார். அவருடைய கரத்தில் நம்மை ஒப்பு கொடுப்போமா....

அன்பின் பிதாவே, இந்த நாளிலும் உம்முடைய சத்துவத்தில் பலப்பட வேண்டிய அவசியத்தையும், தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொண்டவர்களாய், கர்த்தரால் எழுப்ப ஆயத்தமாயிருக்கும் ஒரு சேனையாக நாங்கள் எழும்ப எங்களை ஒப்புக் கொடுக்கிறோம். சகலத்தையும் செய்து முடித்தவர்களாய், உம்முடைய வருகையை எதிர் கொள்ளும் பாக்கியத்தை எங்களுக்கு தாரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே ஆமென்..

***-R.Solomon***

## முதலாம் வார ஜெபக்குறிப்புகள்

- கோரோனா கொள்ளை நோயின் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சையில் உள்ள யாவரும் விரைவில் சுகம் பெற ஜெபிப்போம்.
- கோரோனா தொற்று இருக்கும் என்ற சந்தேகத்தின் பேரில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள யாவரும் பரிசோதனை முடிவில் தொற்று இல்லை என்ற சமாதானமான முடிவை பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- இந்த கொள்ளை நோயின் நிமித்தமாய் தங்களுக்கு பிரியமானவர்களை இழந்து தவிக்கும் குடும்பங்களை கர்த்தர் ஆறுதல்படுத்தும் படியாய் ஜெபிப்போம்.
- குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியவர்களை இந்த தொற்று சீக்கிரம் தாக்கும் அபாயம் உள்ளதால் குழந்தைகள் மற்றும் முதியோரின் பாதுகாப்புக்காக ஜெபிப்போம்.

## இரண்டாம் வார ஜெபக்குறிப்புகள்

- இந்த சூழ்நிலையை கையாள தேவையான ஞானத்தை கர்த்தர் நம்முடைய பிரதமர்க்கும், முதலமைச்சர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் அருளும்படியாய் ஜெபிப்போம்.
- இந்த கடினமான சூழ்நிலையிலும் தன்னலம் பாராது உழைத்துக் கொண்டிருக்கிற காவலர்கள், மருத்துவர்கள், தூய்மைப் பணியாளர்கள் போன்ற யாவருக்காகவும் ஜெபிப்போம்.
- தொடர்ச்சியான இந்த ஊரடங்கின் மூலமாய் வாழ்வாதாரத்தை இழந்துள்ள கூலித்தொழிலாளர்கள், வியாபாரிகள் எல்லாருடைய தேவைகளும் சந்திக்கப்படும்படியாய் ஜெபிப்போம்.
- இந்த ஊராடங்கின் நிமித்தமாய் தங்கள் சொந்த ஊர்களுக்கு, நாடுகளுக்கு திரும்ப முடியாமல் பாதிக்கப்பட்டுள்ள யாவரும் விரைவில் தங்கள் குடும்பத்தோடு இணைக்கப்பட ஜெபிப்போம்.

## மூன்றாம் வார ஜெபக்குறிப்புகள்

- இதன் தாக்கத்தினால் அதிகமாய் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்க ஐக்கிய தேசத்திற்காய் ஜெபிப்போம். இதன் தொற்று மட்டுப்படுத்தப்பட ஜெபிப்போம்.
- இத்தாலி தேசம் அதிக உயிரிழப்புகளை சந்தித்து வருகிறது. உயிரிழப்புகள் குறையவும் தேசம் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.
- ஸ்பெயின் தேசம் இந்த கொள்ளை நோயில் இருந்து முற்றிலுமாக பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.
- கிட்டதட்ட *200*க்கும் அதிகமான தேசங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த தேசங்கள் யாவும் இந்த பேரழிவில் இருந்து மீண்டு எழும்பி வரும்படியாய் ஜெபிப்போம்.

## நான்காம் வார ஜெபக்குறிப்புகள்

- இந்த ஊரடங்கின் நிமித்தமாய் தேசத்திற்குள் சட்டம் ஒழுங்கு கெடாதபடி கர்த்தர் சமாதானமாய் தேசத்தை பாதுகாத்துக்கொள்ளும்படியாய் ஜெபிப்போம்.
- உற்பத்தி முடக்கப்பட்டுள்ளதால் தேசிய பொருளாதாரம் பெரிய பின்னடைவை சந்தித்துள்ளது. இந்த பின்னடைவில் இருந்து தேசம் மீட்கப்பட ஜெபிப்போம்.
- சிறு, குறுந் தொழில் செய்து வந்தவர்கள் வெகுவாய் பாதிக்கப்பட்டதினால் அநேகர் வேலைவாய்ப்பை இழக்க நேரிடும். இந்த சூழ்நிலைகளெல்லாவற்றிலும் கர்த்தர் அவர்களை நடத்தும்படியாய் ஜெபிப்போம்.
- தங்களுடைய முதலீடுகளை இழந்து வாழ்வாதாரம் இன்றி நிற்கதியாய் நிற்பவர்களை கர்த்தரே தாங்கும்படியாய் ஜெபிப்போம்.

## ஐந்தாம் வார ஜெபக்குறிப்புகள்

- கர்த்தர் மனுக்குலத்திற்குள் அனுமதித்த இந்த கொள்ளைநோயின் நிமித்தமாய் இரட்சிகப்பட்ட ஒவ்வொரு தனி மனிதனுக்குள்ளேயும் ஒரு ஜெப ஆவி ஊற்றப்பட ஜெபிப்போம்.
- சபைகள் கர்த்தருடைய வருகைக்கென்று தங்களை சுத்திகரித்துக்கொண்டு ஆயத்தப்பட ஜெபிப்போம்.
- தேசம் கர்த்தருக்கு விரோதமான எல்லாவிதமான அருவருப்புகளிலும் இருந்து சுத்திகரிக்கப்பட ஜெபிப்போம்.
- கடைசி கால எழுப்புதலுக்கு முழு உலகமும் ஆயத்தப்படுத்தப்பட ஜெபிப்போம்.

# TRUE SOLDIER

உண்மை சேனை வீரனுக்கு....

இதை வாசிக்கிற அன்பு தம்பி, தங்கச்சி, ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்நாட்களில் எங்கு பார்த்தாலும் கொள்ளை நோய்களும், அழிவுகளும், பஞ்சங்களும், பூமி அதிர்ச்சிகளும், இன்னும் பல விதமான அழிவின் செய்திகளும் நம்முடைய செவிகளில் கேட்டுக் கொண்டிருக்கிறது. இவைகள் எல்லாம் நமக்கு சொல்லுகிற செய்தி, இவ்வுலகத்தின் கடைசி நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று. மேலும், இந்த கடைசி நாட்களில் தான், கர்த்தர் ஒரு மாபெரும் யுத்த தலைமுறையை எழுப்பப் போகிறார். இந்த தலைமுறையை 'ஒரு யுத்த தலைமுறை' என்றால் அது மிகையாகாது. இந்த கடைசி நாட்களில் நடக்க போகிற பல பயங்கரமான காரியங்களினின்றும், வரப் போகும் கொடிய நாட்களில் கட்டவிழ்த்துவிடப் போகிற பல அந்தகார வல்லமையினின்றும், தன் முழங்காலாலும், தன் வாழ்கையின் சாட்சியாலும், எதிர்த்து போராடி தன் உயிரையும் துச்சமாய் நினைத்து, தன் சேனை அதிபதியோடு கூட யுத்தகளத்தில் ஒரு யுத்த சேனையாய், மற்றும் ஒரு நல்ல போர் சேவகனாய், எதற்கும் துணிந்து நிற்கும் ஒரு யுத்த சந்ததி நாம். வெளி.*12:11*, ல் சொல்லுகிறபடி, **"மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்"**. பிசாசை, சிலுவையில் வெளியரங்கமான கோலமாக்கி, தன்னுடைய மரணத்தினால் அவனை ஜெயித்த, நம்முடைய தகப்பனாகிய இயேசு கிறிஸ்துவைப் போல, ஜெயிக்கிற சந்ததி நாம். கர்த்தர் வேறுயாரையோ குறித்து பேசிக்கொண்டிருக்க வில்லை, இதை வாசிக்கிற உன்னைக் குறித்து தான் பேசிக்கொண்டிருக்கிறார். நீயே அந்த சந்ததி. நீயே அந்த தலைமுறை. ஒருவேளை, நான் எதற்காக உருவாக்கப்பட்டேனோ, என் வாழ்கையின் நோக்கம் என்னவோ, என்றெல்லாம் நீ யோசித்து கலங்கலாம். உபயோகமற்றவன் என்று சக மனிதர்களால் தள்ளப்படலாம். ஆனால், இதை வாசிக்கிற உங்களையே கர்த்தர் யுத்த தலைமுறை என்றும், நல்ல போர்ச்சேவகன் என்றும் கூறுகிறார். இதை வாசித்துக் கொண்டிருக்கிற, ஒவ்வொருவரும் நான் ஒரு சேனை வீரன் என்று, நீ உன்னை அடையாளம் கண்டு கொள்ளவும், யுத்த களத்தில் ஒரு போர்ச்சேவகனாய் அவரோடு கூட நிற்பதற்கும், அர்ப்பணித்து ஓடுவதற்கும், யுத்தம் செய்வதற்கும், தெரிந்தெடுக்கப்பட்டவன் என்பதை அறிந்து கொள்ளவும், ஒரு நல்ல போர்ச்சேவகனாய், இந்த உலகத்தில் உன் சாட்சியை காத்து, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் சாத்தானை ஜெயிக்கிற யுத்த தலைமுறை நீ என்பதை தெரிந்து கொள்ளவே, இந்த பகுதியை கர்த்தரால் ஏவப்பட்டு எழுதுகிறேன்.

இன்றைக்கும் நீங்கள் ஒரு சேனை என்பதை அறிந்து கொண்டீர்கள். ஒரு உண்மை சேனை வீரனுக்கு, ஒரு சில முக்கியமான குணாதிசயங்கள் அவசிமாக காணப்படுகிறது. இவ்வுலகில், ஒரு இராணுவத்தில் இருக்கிற, இராணுவ வீரனுக்கு, அனுதினமும் தன்னை தயார் நிலையில், தன்னை வைத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்படியென்றால், நீங்களும் நானும் கர்த்தரோடு கூட, இந்த விழுந்து போன பேய்களை எதிர்த்து, இனிவரும் கடைசி நாட்களில் யுத்தம் பண்ணபோகிற யுத்த தலைமுறை. நமக்கு தேவைப்படும் ஆயத்தம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை ஒரு சேனையாய், நாம் ஒவ்வொரு மாதமும் கற்றுக்கொள்ளப் போகிறோம். ஆயத்தப்படு, போராடு, ஜெயித்திடு. கர்த்தர் தாமே உங்களை ஆசிர்வதிப்பா ராக.

*-Daisy Solomon*

# An Étude on Romans



There reached a wonderful epistle to the followers of Jesus Christ in Rome during the winter of 57–58 AD from the Apostle Paul who was in the city of Corinth, Greek. This New Testament letter demonstrates and portrays the reverent understanding of God's salvation through His only begotten Son, Jesus Christ. No wonder why God named His Son as Jesus! Jesus means Saviour. This epistle was composed by the Apostle Paul with the inspiration of the Holy Spirit to make people aware that the salvation is offered (as a free gift) through the gospel of Jesus Christ.

"For I am not ashamed of the gospel of Christ: for it is the power of God unto salvation to everyone that believeth" (Romans 1:16) – I will strongly acclaim the Father, the Son, and the Holy Spirit for this magnificent key verse. It's splendid indeed!

Having said that, this free gift of salvation is offered to all; not just confined to the so called Christians by birth. Salvation to everyone that believeth – the person who read this article need not to be a Christian or from the Christian background. Trust me! "Jesus is the only way (John 14.6)" and he is the universal Saviour. He is not the saviour for Christians or Jews. Jesus is the saviour to all mankind. In 1 John 4:14, KJV: the bible says "And we have seen and do testify that the Father sent the Son to be the Saviour of the world." Therefore, if you believe Christ as your personal saviour you will automatically receive this free gift of God i.e. Salvation. Because if you confess with your mouth that Jesus is Lord and believe in your heart that God raised him from the dead, you will be saved. For with the heart one believes and thus has righteousness and with the mouth one confesses and thus has salvation. – Romans 10:9-10. Salvation- this excellent piece of God's work is revealed in the Gospel of Jesus Christ. What does the Gospel of Christ offer you or what does it mean? It is the good news

presented to you through the birth, life, death, and resurrection of Jesus Christ so that you understand God's love, salvation, the Heavenly Kingdom, and eternal life through Christ. Let me tell you something very important! We are all sinners by birth and the sin is inevitable in our lives until we encounter with Jesus, who bore our sins on the cross for you and me to be saved! You don't stop as you got the salvation experience for the first time, but it should be continued throughout your life time unto death. Hence, be vigilant about your salvation which you believed and received it from God. The bible says in Matthew 24:13 "But he that shall endure unto the end, the same shall be saved." If you are freely willing to follow Jesus Christ as your personal saviour, here is your moment! Come and join me with this following prayer,

Our Father in Heaven, who is Holy! I confess that I am a sinner and I have consciously disobeyed your righteous commandments. I feel really sorry that I didn't bother what's right or wrong in my daily life. Now I fall at your feet asking for forgiveness in the Name of the Lord and Saviour Jesus Christ who died on the cross for my sins, rose again and enthroned at Your right hand. Wash my sins by the blood of Jesus Christ and forgive all my iniquities as I repent and willing to sin no more. Help me to pursue the Christ-like life and to safeguard my salvation unto my death. I pray in the Name of the Lord and Saviour Jesus Christ. Amen!

I would like to encourage you by this unquestionable promising verse – "2 Timothy 4.18 (KJV): And the Lord shall deliver me from every evil work, and will preserve me unto his heavenly kingdom: to whom be glory for ever and ever. Amen." Stay inflexible in your daily bible meditations, Prayer and pursuing the same in practical day to day life. God bless you!

-Manoj Kumar

# *Pencil-க்கு grip-ஆ*

**வாலிப தம்பி, தங்கச்சி!!! உனக்கு ஞாபகம் இருக்கா? நாம் குழந்தையா இருக்கும் போது, (*ie, LKG & UKG*), எப்போடா இந்த *slate*-ஆ தூக்கி போட்டுட்டு பென்சில் வச்சு எழுதுவோம் என்று ஆசையா இருக்கும்... அழகா எழுதணும் என்று தோன்றும், ஆனா முடியாது... ஏன் தெரியுமா? ஒரு குழந்தையின் கைவிரல் ரொம்ப மிருதுவானது. இப்போது தான் அந்த குழந்தை *Pencil* பிடிக்க கற்றுகொண்டிருக்கிறது. மேலும், அந்த குழந்தை எவ்வளவு நினைத்தாலும், அழகா (*Perfect*) எழுத முடியாது. ஆனால் அந்த குழந்தை *Pencil Grip* அணிந்து எழுதும் போது *perfect* ஆக இன்னும் அழகாக எழுதும். நாமும் இந்த குழந்தைகளை போல, நம்முடைய ஓட்டத்தை ஆரம்பித்து ஓடிக் கொண்டிருக்கிறோம். போக வேண்டிய தூரம் வெகு தூரம்.**

**நம்முடைய இலக்கை அடைய, நாமும் "இயேசு" என்கிற *Grip* ஐ தரித்துக் கொள்ள வேண்டும். எப்படி ஒரு *Pencil Grip* குள்ளாக, ஒரு குழந்தையின் கை விரல் இருக்கும் போது, அழகான எழுத்து வடிவம் பிறக்கிறதோ; அதேபோல் 'இயேசு' என்கிற *Grip* குள்ளாக, நாம் முழுமையாக அடங்கி இருக்கும் இருக்கும் போது, நமக்கு எதிரான யுத்தத்தில் நாம் ஜெயங்கொள்ள முடியும்.**

***A Research says "Grip" facilitates (LFSE) Legibility (தெளிவு), Formation (உருவாக்கம்), Speed (செயல் வேகம்), Endurance (உடற்பலன், விடாமுயற்சி, பொறுமை)...***

***-Blessy***

# கோதுமை மணிகள்

## பிளாண்டினா

நீ ஒரு அடிமை பெண் மட்டுமே!!! உன்னால் ரோமானிய அரசுக்கு விரோதமாக எந்த காரியமும் செய்ய முடியாது, என்று மிருகத்தனமான குரல் ஒரு பக்கம் எழும்ப,

இல்லை!!! நான் ஒரு கிறிஸ்தவள். என் இயேசுவை மாத்ரமே நான் வணங்குவேன். வேறு எந்த சிலைகளையும் வணங்க மாட்டேன் என்ற வைராக்கியமான அடிமை பெண்ணின் குரல் ஒரு பக்கம் பதில் எழும்ப,

கோபத்துடன் ரோமானிய அரசு!!

என்ன சம்பவித்தது???

யார் அந்த அடிமை பெண்???

இங்கு ஒரு சில காரியங்கள்..... அவளைப் பற்றி.....

அவள் பெயர் பிளாண்டினா(*Blandina*).20 வயது நிரம்பிய வாலிப மகள்.

இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில்(கி.பி.177) ஒரு மிஷினரி கவுலுக்கு (நவீன கால பிரான்ஸ்) வந்து, லியோன்ஸ்( *Lyons*) என்ற இடத்தில் திருச்சபையை நிறுவி அநேகரை கிறிஸ்துவின் மந்தையிலே சேர்த்து கொண்டு வந்தார். அப்பொழுது தான் கிறிஸ்தவம் பரவ ஆரம்பித்தது. திருச்சபை வளர்ந்து கொண்டே இருக்கும் சூழலில் அவர்களுக்கு விரோதமான துன்புறுத்தலும் ஆரம்பமானது.

விசுவாசிகள் தங்கள் வீடுகளிலிருந்தும், தொழில்களிலிருந்தும் வெளியேற்றப்படுவது, உட்பட அனைத்து வகையான அவமானங்களையும் தனிப்பட்ட காயங்களையும் தாங்கிக் கொண்டனர். அவர்களை அடித்து, கல்லெறிந்து, கொள்ளையடிக்க கும்பல்கள் உருவாக்கப்பட்டன. விசுவாசிகள் கைது செய்யப்பட்டபோது, அவர்கள் தைரியமாக கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தை ஒப்புக்கொண்டனர். பின்னர் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, இறுதியில் தங்கள் விசுவாசத்திற்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்தனர். பேரரசர் மார்கஸ் அரேலியஸின் (*Marcus Aurelius*) கீழ் இந்த கொடூரமான மதத் துன்புறுத்தல் நடந்தது. இந்த சமயத்தில் தான் பிளாண்டினா என்ற அடிமை பெண் ரோமானியர்களால் கைது செய்யப்படுகிறாள். ரோமானியர்கள் பெரும்பாலும் புறஜாதிகளாக இருந்தனர். ஆனால், பிளாண்டினாவின் எஜமானி ஒரு ரோமானிய பெண் தான், அவள் இயேசுவை ஏற்றுக் கொண்டிருந்தாள். அவள் இயேசுவையும் அவருடைய அன்பையும், அவருடைய சிலுவை பாடுகளையும் பற்றி பிளாண்டினாவிடம் சொன்னாள். அவளுடைய இரட்சகராகிய இயேசுவை நேசிக்கக் கற்றுக் கொடுத்தாள். பிளாண்டினா இயேசுவின் ஆழமான அன்பை ஏற்றுக்கொண்டாள். ஆனால், அந்த காட்டு மிருக அரசாங்கம், எந்த மக்களும் இயேசுவை கடவுளாக வணங்கவோ, ஜெபிக்கவோ கூடாது என்று சட்டம் பிறப்பித்தது. எனவே அவர்கள், பிளாண்டினாவின் எஜமானியின் தலையை வெட்டி பிளாண்டினாவை சிறையில் அடைத்தனர். அவளையும் கிறிஸ்துவை மறுதலிக்க வேண்டும் என்று மிரட்டினார்கள்.

"கிறிஸ்தவர்களே, நீங்கள் பொல்லாதவர்கள்", "நீங்கள் தவறான காரியங்களைச் செய்கிறீர்கள், நீங்கள் ரோமின் கடவுள்களை வணங்க மாட்டீர்களோ..???" என்றும் கடிந்து கொண்டனர். உடனே பிளாண்டினா "நாங்கள் மோசமான வாழ்க்கையை வாழ வில்லை, நாங்கள் நல்லவர்களாகவும், தூய்மையானவர்களாகவும், கனிவானவர்களாகவும், யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யக் கூடாது என்றும் வாழ கற்பிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் ரோமின் கடவுள்களிடம் நாம் ஜெபிக்கக் கூடாது. ஏனென்றால், அவர்கள் உண்மையான தெய்வங்கள் அல்ல, இயேசு தான் மெய்யான தெய்வம், நாம் அவரை மட்டுமே வணங்க வேண்டும். அவரால் மட்டுமே இரட்சிப்பு உண்டு.

அதற்கு ரோமானியர்கள், "நீ ஒரு அடிமைப் பெண் மட்டுமே. ரோம் கடவுள்களை வணங்கும்படி ரோம அரசாங்கம் சொன்னால், அதை தான் செய்ய வேண்டும். இயேசுவை வணங்க உங்களுக்கு உரிமை கிடையாது. இப்போதும் விவேகமாக நடந்து கொள்ளுங்கள். எங்கள் தெய்வங்களை வழிபடும் ஆலயத்திற்கு நீங்கள் வந்து தூபத்தை எரித்தால், நாங்கள் உங்களை விடுவிப்போம், உங்களை தண்டிக்க மாட்டோம் என்றார்கள்.

ஆனால், 20 வயது நிரம்பிய அந்த வாலிப மகள்.... "என்னால் அதைச் செய்ய முடியாது. இயேசுவே என்

கடவுளும், இரட்சகரும் ஆவார். நான் அவரை மறுதலித்தால் அவர் வருத்தப்படுவார். கிறிஸ்தவர்களாகிய நாங்கள் எங்களை சிருஷ்டித்த தெய்வமாகிய இயேசுவை அதிமாக நேசிக்கிறோம். எந்தத் தீங்கும் செய்ய மாட்டோம், பொய்யான கடவுள்களை வணங்க முடியாது'' என்று துணிச்சலுடன் பதில் கூறினாள்.

''முட்டாள்தனமான பெண்ணே! ஒரு அடிமையாகிய நீ, ரோமின் சக்கரவர்த்தியையும், ரோமின் சுதந்திர மனிதர்களையும் விட பெரியவளோ? நாங்கள் உங்களுக்கு இன்னொரு வாய்ப்பை வழங்குகிறோம். கோவிலுக்கு வந்து தூபம் போடுங்கள், நீங்கள் சுதந்திரம் அடைவீர்கள்.'' அவளோ அதை ஏற்றுக்கொள்ள வில்லை. உங்கள் மேலதிகாரிகளுக்கு எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும் என்பதை நாங்கள் விரைவில் உங்களுக்குக் கற்பிப்போம்.'' என்று கோபத்துடன் அந்த ரோமானியர்கள் சென்றனர்.

அந்த தைரியமான, உண்மையுள்ள பிளாண்டினா சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அவளது முதுகில் இரத்தம் மூடும் வரை கொடூரமாகத் தாக்கப்பட்டாள். ஆனால், அவளைத் துன்புறுத்தியவர்கள் அவளைக் கொல்ல விரும்பவில்லை, அவளுடைய விருப்பத்தை மீறி அவளை ரோம அரசுக்கு கீழ்ப்படியச் செய்ய விரும்பினார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து பிளாண்டினாவின் இருதயத்தில் பேசினார்.

*அவருடைய வல்லமை மற்ற எல்லா வல்லமைகளை விட பெரியது*.*ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்* (மத்தேயு 10:28) *மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்* (மத்தேயு 10:32) *உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:33) *.

என்ற வசனங்களின் மூலம் இயேசு கிறிஸ்து பிளாண்டினாவை தேற்றினார்.

பின்பு, உம்முடைய சித்தம் நிறைவேறட்டும் அப்பா என்று ஜெபித்தபோது, ஆழ்ந்த மகிழ்ச்சியும் அமைதியும் அடிமைப் பெண்ணின் இதயத்தை நிரப்பின.

இந்த பாடுகள் எவ்வளவு காலம் நீடித்தது? குறைந்தது இரண்டு வாரங்களுக்கு, ஒவ்வொரு நாளும் பொல்லாத ரோமின் கொடூரமான ஊழியர்களால் அவள் தண்டிக்கப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டாள்; ஆனாலும், அவள் இயேசுவால் பலப்படுத்தப்பட்டாள்.

பிற கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டு கொல்லப்படுவதைக் காண அவர்கள் அவளை அரங்கிற்கு அழைத்துச் சென்றார்கள். அந்த அரங்கம் ஒரு மகத்தான ஆம்பிதியேட்டரின் (*Amphitheatre*) உட்புறத்தில் இருந்தது. இது கிறிஸ்தவர்கள் கொல்லப்படுவதைக் காண வந்த 10,000 க்கும் மேற்பட்ட மக்களைக் கொண்டிருந்தது. அங்கு ஒரு பயங்கரமான இரும்பு நாற்காலி, பலமடங்கு சூடாக்கப்பட்டு இருக்கும். கிறிஸ்தவர்கள் கிட்டத்தட்ட இறக்கும் வரை அதில் உட்கார வைக்கப்படுவார்கள். பின்னர் அவர்களை வலையில் போட்டு அரங்கில் பறக்கவிடுவார்கள். அங்கே சிங்கங்களும் புலிகளும் சாப்பிட பசியுடன் இருக்கும். ஒருவேளை சிங்கங்களும் புலிகளும் அவற்றைத் தொடாவிட்டால் (இது பெரும்பாலும் நடந்தது), ஒரு காட்டு காளைக்கு அவர்கள் சரீரம் போடப்பட்டு கொல்லப்பட்டனர்.

அந்த வாலிபப்பெண் பிளாண்டினா ஆம்பிதியேட்டருக்குள் கொண்டு வரப்பட்டாள். மற்ற பார்வையாளர்கள் கொடூரமான காட்சியை கண்டு மகிழ்ச்சியாக அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஆனால் பிளாண்டினாவோ, தனது அன்பான நண்பர்கள் இத்தகைய பயங்கரமான வேதனையையும் மரணத்தையும் அனுபவிப்பதைக் கண்டு துக்கமும், திகிலும் நிறைந்திருந்தவளாய் நின்றாள். ஆனால், இயேசு அவர்களுடன் இருந்தார். ஒவ்வொரு கொடூரமான காட்சிக்குப் பிறகு பிளாண்டினா மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, இயேசுவை மறுதலிக்கவும், ரோமின் கடவுள்களை வணங்கவும் அவளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. அவள் அசையாதவள் என்று கண்டறியப்பட்டபோது, அவள் கொடூரமாகத் தாக்கப்பட்டு கொக்கிகளாலும், ஸ்டேக் (*stake*) என்று சொல்லக்கூடிய அடுக்குகளாலும் அவளுடைய சரீரம் கிழிக்கப்பட்டது.

பிளாண்டினாவின் இறுதி நாள்!!!!

பிளாண்டினா ஆம்பிதியேட்டருக்குள் கொண்டுவரப்பட்டாள். அதே நேரத்தில் பொன்டிகஸ் (*Ponticus*) என்ற சிறுவனும் அழைத்து வரப்பட்டான். பிளாண்டினா அந்த சிறுவனையும் மரணத்திற்கு உண்மையாக இருக்க ஊக்குவித்தாள். அவர்கள் இருவரும் உண்மை உள்ளவர்களாக இருந்தார்கள். அவள் இறப்பதற்கு முன்பு அந்த சிறுவன் இறந்தான். அந்த சிறுவன் இறக்கும் போது அவனுக்கு ஒரு ஜீவ கிரீடம் சூட்டப்பட்டதை தன் கண்களால் பார்த்து களித்தாள்.

ஒரு அடிமைப் பெண் இவ்வளவு கொடூரங்களை சகித்துக்கொண்டும், இவ்வளவு காலம் வாழவும் முடியுமா?? என்று அவளுடைய எதிரிகள் ஆச்சரியப்பட்டார்கள்.

அவளுடன் இருக்கிற அந்த உண்மை இரட்சகரை பற்றி என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர் எப்போதுமே அவளுக்கு அருகில் இருப்பதை அவர்கள் அறியவில்லை. அவளை அந்த சூடான நாற்காலியில்

உட்கார வைத்தனர். அவள் சரீரம் அந்த சூட்டில் வெந்து போனது. பின்பு பாதி கருகின நிலையில் சிங்கங்களுக்கும், புலிகளுக்கும் நடுவில் தூக்கி எறியப்பட்டாள். ஆனால், அவைகள் அவளைத் தொடவில்லை. பிறகு, காட்டுக்காளைக்கு உணவாக வீசப்பட்டாள். மீந்திருந்த அவளுடைய சரீரத்தை ரோன் (*Rhone*) என்ற நதியில் ஓடவிட்டனர்.

இவள் தான் அந்த அடிமை பெண்!!!!!

என் அன்பு சகோதர! சகோதரிகளே!! தன் சிறு வயதில் எத்தனையோ ஆசைகளோடு! எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு! உலக சிற்றின்பங்களில் தன் நாட்களை கழிக்க வேண்டிய காலத்தில் ஏன் இந்த நிலை?? அவளுக்கு இந்த உலகம் பெரிதாக தெரியவில்லை. தன் ஆசைகள் பெரிதாக தோன்றவில்லை. ஒரு அடிமையாக வந்த நாட்டில் அவளால் அவர்களுக்கு இணங்க சென்றிருக்க முடியும். ஆனால், அவளுடைய ஆசையும், ஏக்கமும், எதிர்பார்ப்பும் அவளை படைத்த இயேசுவையே சார்ந்திருந்தது. அவருக்காக ஒரு அரசாங்க சட்டத்தையே எதிர்க்க தைரியமும், வைராக்கியமும் இருந்தது. காரணம்...., இயேசுவின் உண்மையான அன்பு...


நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை சிந்தித்து பார்ப்போம். இயேசுவுக்காக எதையும் இழக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கிறோமா!!! அல்லது உலகத்துக்காக இயேசுவை இழந்து கொண்டு இருக்கிறோமா!!!!

அர்ப்பணிப்போம்!! இயேசுவுக்காக!!

*-Priya*

# PUT ON THE FULL ARMOR OF GOD

**EPHESIANS 6:13**




-James Best

Reg.No. 4/46/2019
Regd.Office :428,7th Middle Street,Thiagarajanagar, Tirunelveli - 627011
Phone: +91 766 799 5892, +91 900 322 4541 Email : info@endtimewarriors.org